[1971 டிசம்பர் 13

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

Copper Mines.

* 322 Q.—THIRU R. R. MUNUSAMW : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that Copper Mines are functioning in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, நாம் ஆராய்ச்சி நடத்தாவிட்டாலும், வேறு மாநிலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, செம்பு எடுக்கப்படுமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காப்பர் தனியாக எடுக்கப் படுவதில்லை copper sulphides of lead, zinc, nickel, molybdenum, etc. இவைகளோடு கிடைக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில், மாமண்டூர் பகுதியில் 0.63 சதவீதம் காப்பர் உள்ள பொருள் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொருளாதார அளவில் அதை எடுக்க முடியுமா என்பது பரிசிலனையில் இருக்கிறது.

Closed Mills.

* 323 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have taken steps to reopen the closed textile mills at Coimbatore; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆய்வுக் குழுக்கள் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் முடிவு இன்னும் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே கோவையில் முருகன் மில் திறக்கவும், நகரத்திலுள்ள, பங்கஜா மில் போன்ற மூன்று மில்கள் சீக்கிரத்தில் திறக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப் பட்டதே. அதை துரிதப்படுத்த படிப்படியாக ஒவ்வொரு மில்லாகவாவது திறக்கப்படும் என்ற ஒரு முடிவை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே இரண்டு ஆலைகள் நீதி மன்றத்தில் இருக்கின்றன. முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்

1971 டிசம்பர் 13]

கின்றன. மீதி ஆலைகள் புதிய சட்டத்தின் அடிப்படையில் எடுக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு இந்தச் சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether there is any Government watch over the textile mills to see that the managements are not manipulating closure of mills when they are likely to incur losses?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேண்டுமென்றே மூடுவதாகத் தெரியவில்லை. பல ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருக்கிறது. நம் முயற்சியில் ஐந்து ஆலைகள் திறக்கப்படுகின்றன. ஒரு கோடி ரூபாய் அளவில் வங்கிகளுக்கு காரண்டி கொடுத்து, இந்த ஆலைகளைத் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் கிடைத்திருக்கும் வெற்றி ஓரளவுதான். எந்த ஆலையையும் வேண்டுமென்றே மூடுவதில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 5 ஆலைகள் திறந்து இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான பணத்தை மத்திய சர்க்கார் கொடுத்து விட்டார்களா ? இல்லை என்றால். கொடுக்க வேண்டும் என்று கேட்க முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் 51 சதவிகிதம் கொடுக்க வேண்டும். ஆனால் மிகக் குறைவாகத் தந்தார்கள். அந்தத் துறை அமைச்சரிடம் நானும், மாண்புமிகு முதல் அமைச்சரும் சொன்னபோது, அன்று மாலை 3 மணிக்குள் உத்தரவு வரும் என்று சொன்னார்கள். ஆனால் வரவில்லை. சில மாதங்கள் ஆகிறது என்று நினைக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether it is not necessary to have a watch over the mills when the mills are incurring heavy losses and under that excuse they will demand closure or taking over by the Government after some time? May I know whether even with the permissiion of the Central Government, the local Government have made any arrangements for such investigations or watch or research?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக மூடிய ஆலைகளை 'ஸிக் மில்ஸ்' என்ற அடிப்படையில் நாம் பரிசீலனைக்கு எடுக்க இரண்டு குழுக்கள் அமைத்திருக்கிறோம். அது மத்திய சர்க்காரின் கவனத்தில் இருந்து வருகிறது. எல்லா ஆலைகளும் எப்பொழுதும் மூடப்படும் என்று எதிர்பார்ப்பது சரியில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, இந்த அவசர காலத்தை உத்தேசித்து, மூடிய ஆலைகளைத் திறக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் திறக்கத்தயாராக இருக்கிறார்கள். நாம் தான் பணம் நஷ்டம் ஏற்படக்கூடாது என்று, எந்த ஆலைகள் நஷ்டமில்லாமல் நடக்கும் என்பதைப் பார்த்து, அதை எடுக்க முயற்சி செய்கிறோம்.

* 324 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the closed mills in Madurai have been reopened?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ராஜாமில், முருகன் மில் போன்றவைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு மில்லையாவது சீக்கிரமாக எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்குள்ள மூன்று ஆலைகளையும் எடுக்க மத்திய சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு, லாபத்தில் நடத்த முடியாது என்று அறிவித்துவிட்டார்கள்.

இசைக்கருவிகள் உற்பத்தி

* 325 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் தமிழகத்தில் உற்பத்தி செய்யும் கூட்டுறவு தொழிற்சாலை ஏதேனும் தற்போது செயல்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ? எந்தெந்த நாடுகளுக்கு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, நம்முடைய இசைக் கருவிகள் வெளி நாட்டில் நல்ல கிராக்கியுள்ளவைகளாக இருக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் இவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்தால், அந்நியச் செலாவணியும் ஈட்ட முடியும். அந்த வகையில் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்தில் இது போன்ற கூட்டுறவு சொசைடி இருக்கிறது. இதிலே சென்ற ஆண்டு 1970–71-ல் ரூ. 38,000-க்கு விற்பனை ஆகியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I request the Hon. Minister to state the particular wood from which these instruments are prepared and the places where such wood is available?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தகவல் என்னிடத்தில் இல்லை.